## 5.9 கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம்

**வேத வசனம்:** நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். யோவான் 14:3

**அறிக்கை:** தேவனுடைய வருகைக்காய் காத்திருப்போருக்குக் கிரீடம் தருவார்

**சத்தியம்:** சோதனைகளைச் சகித்துக்கொண்டே கிறிஸ்துவின் வருகைக்காய்க் காத்திருக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவது நிச்சயம். தம்மை நேசிப்பவர்களுக்காய்த் தேவன் வாக்களித்த ஜீவக்கிரீடத்தை அவர்கள் சுதந்தரிப்பார்கள்.

### பாடக்குறிப்புகள்

- **கர்த்தருடைய துரித வரவை அறிதல்** - *மத். 24:36-42, 1 கொரி.15:50-52*
- **பரிசுத்தத்திற்காய்ப் பிரித்தெடுக்கப்பட்டிருத்தல்** - *மத். 25:11-13*
- **ஒருவருக்கொருவர் தயவாயிருத்தல்** - *எபே.4:2, 32, 1 யோவான் 4:16*
- **கர்த்தருக்கு நல்ல சாட்சிகளாயிருத்தல்** - *1 தீமோத் 4:16-17, யோவான் 8:32, ரோ.14:11-12*

### ஆர்வமூட்டும் வினாக்கள்
(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- நீ நேசிப்பவர் உன்னிடம் வரும்போது எப்படி ஆயத்தமாவாய்?
- கிறிஸ்துவின் வருகைக்காய் ஆயத்தமாயிருப்பதை எவ்விதம் உறுதி செய்யலாம்?
- வெளி.21 இன்படி நித்திய வாழ்வு எப்படி இருக்கும்

### வேதப்பகுதி
மத்தேயு 25:1-13
வெளி. 22:6-21

### நீ ஆயத்தமா?

கர்த்தர் இயேசு தம்முடைய திருச்சபையை ஏற்றுக்கொள்ள மறுபடியும் வருகிறார். இது அன்பும் ஐக்கியமும் உள்ள பரிசுத்தமும் வல்லமையுமானத் திருச்சபை. ஆகையால் நாம் இரக்கம் மற்றும் மன்னிக்கும் குணங்களுடன் பிறரிடத்தில் தாழ்மையாகவும், கண்ணியமாகவும் இருக்கும்படி கர்த்தர் சொல்லுகிறார். நாளைக்கே கர்த்தர் வருகிறார் என்றால் என்ன நடக்கும்? அவரை முக முகமாய்ச் சந்திக்க நீ ஆயத்தமா? அவர் உன்னிடம் என்ன கேட்பார் என்றும் நீ அதற்கு என்ன பதில் சொல்லுவாய் என்றும் எண்ணுகிறாய்? காத்திருக்காதே. இன்றே அவருடன் பேசி, அவருடைய மகிமையான வருகையில் அவரை சந்திக்க ஆயத்தப்படு.

### செயல்

தேவன் நம்முடன் இருக்கிறார். நாம் செய்யும் அனைத்தும் அவருக்கு மகிமையைக் கொண்டு வரும்படியாய் பார்த்துக்கொள்.

### சிந்திக்க:

இன்று கிறிஸ்து வருவாரென்றால் அவரைச் சந்திக்க நீ தயாரா? அவர் உன்னிடம் என்ன சொல்லுவார் என்று எண்ணுகிறாய்?

___

___

### ஜெபம்:

தேவன் நமக்கென்று சம்பாதித்து வைத்த வெற்றியில் நம்மைப் பங்கடையச் செய்வதற்காக அவருக்கு நன்றி சொல்லி ஜெபத்தை எழுது.

___

___